மாநகர ஆணை எண்.103/2024
ந.க.எண்.அ6/9930/2019

மாநகர காவல் அலுவலகம்,
சேலம் மாநகரம்.
நாள்.02.02.2024.

**கணினி விவர பதிவாளர் தரத்தில் பணிவரன்முறை செய்தல் –ஆணை**

பொருள்: காவல் – சேலம் மாநகரம் – சேலம் மாநகர காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.அ.ஷாஜஹான் த/பெ திரு.அன்வர்பாஷா, தலைமை காவலர் 1771 (லேட்) என்பவருக்கு கணினி விவர பதிவாளர் பதவியில் முன்தேதியிட்டு 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.1433/CA-1/2005-3 நாள்.13.07.2005.

2. இவ்வலுவலக மாநகர ஆணை எண்.1019/2005, ந.க.எண். அ2/501/21721/2005 நாள் 21.10.2005.
3. இவ்வலுவலக மாநகர பணிவரன்முறை ஆணை எண்.289/2016, ந.க.எண்.அ2/215/7641/2016 நாள்.24.03.2016.
4. தலைமை அலுவலக பணி நியமன ஆணை ந.க.எண்.130052/NGB 2(2)/2016 நாள்.26.10.2017.
5. காவல் துறை தலைமை இயக்குநர், தலைமை காவல் படை, தமிழ்நாடு, சென்னை அவர்களுக்கு முகவரியிடப்பட்ட இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.அ6/9930/2019 நாள்.18.11.2019.
6. அரசாணை (2D) எண்.460 உள் (காவல் 15) துறை நாள்.18.11.2023.
7. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.1799852/சி.ஏ.ஆர்.1/2023 நாள்.07.12.2023.
8. இவ்வலுவலக பணிவரன்முறை இரத்து ஆணை எண்.102/2024 ந.க.எண்.அ6/9930/2019 நாள்.02.02.2024.

*******

திரு.அ.ஷாஜஹான் த/பெ திரு.அன்வர்பாஷா, தலைமை காவலர் 1771 (லேட்) என்பவர் பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் தலைமை அலுவலக குறிப்பாணை மற்றும் இவ்வலுவலக ஆணையின்படி 24.10.2005 முற்பகல் அன்று கணினி விவர பதிவாளராக பணிநியமணம் செய்யப்பட்டு பணிபுரிந்த காலத்தில், பார்வை மூன்றில் காணும் இவ்வலுவலக ஆணையின்படி 01.05.2007 முதல் கணினி விவர பதிவாளர் பதவியில் பணிவரன்முறை (வரிசை எண்.2) செய்யப்பட்டுள்ளது.

2. பார்வை நான்கில் காணும் தலைமை அலுவலக பணி நியமன ஆணையின்படி, திரு.அ.ஷாஜஹான் பணிமாறுதலில் 02.11.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவருகிறார். அன்னார் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான 02.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய அரசிடம் ஆணை பெற்று வழங்க கோரி பார்வை ஐந்தில் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் தலைமை அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

3. பார்வை ஆறு மற்றும் ஏழில் காணும் அரசாணை மற்றும் தலைமை அலுவலக குறிப்பாணையில் தனியர்கள் கருணை அடிப்படையில் பணிநியமணங்களுக்கென வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறை தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன்படி, பிரிவு 20(6)(b) குறும வயது, பிரிவு 15 திருமணமான மகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.18,

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020-ன்படி, குறும வயது, காலம் கடந்த விண்ணப்பம், குறைந்தப்பட்ச கல்வித் தகுதி மற்றும் திருமணமான மகள் ஆகியவைகளை பின்பற்றாது, உரிய விதிகளுக்கு விதி விலக்கு ஏதும் பெறாமல் கணினி விவர பதிவாளர் பதவியில் வழங்கப்பட்ட பணிவரன்முறை ஆணையினை ரத்து செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. எனவே பார்வை ஆறு மற்றும் ஏழில் காணும் அரசாணை மற்றும் தலைமை அலுவலக குறிப்பாணை ஆகியவற்றின்படி, திரு.அ.ஷாஜஹான், இளநிலை உதவியாளர் என்பவருக்கு கணினி விவர பதிவாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட்ட பார்வை மூன்றில் காணும் இவ்வலுவலக ஆணையினை (வ.எண்.02) பார்வை எட்டில் காணும் இவ்வலுவலக மாநகர ஆணையின்படி இரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

5. பார்வை ஆறில் காணும் அரசாணையில் திரு.அ.ஷாஜஹான், இளநிலை உதவியாளர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனங்களுக்கென வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, காலம் கடந்த விண்ணப்பம் குறித்தான விதியினை தளர்வு செய்து கணினி விவர பதிவாளர் பதவியில் 01.05.2007 முற்பகல் முதல் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

6. எனவே பார்வை ஆறில் காணும் அரசாணையின்படி திரு.அ.ஷாஜஹான், இளநிலை உதவியாளர் என்பவருக்கு கணினி விவர பதிவாளர் பதவியில் 01.05.2007 முற்பகல் முதல் முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. மேலும் முன்தேதியிட்டு கணினி விவர பதிவாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வுகள் நிலுவை தொகை ஏதும் இருப்பின் அன்னாருக்கு பெற்று வழங்க விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஒம்/- பா.விஜயகுமாரி,
காவல் ஆணையாளர்,
சேலம் மாநகரம்.

பெறுநர்
திரு.அ.ஷாஜஹான், இளநிலை உதவியாளர், மாநகர காவல் அலுவலகம்,
சேலம் மாநகரம்.
நகல்: காவல் துறை தலைமை இயக்குநர், தலைமை காவல் படை, தமிழ்நாடு,
சென்னை-4.
நகல்.பி5 உதவியாளர், மாநகர காவல் அலுவலகம், சேலம் மாநகரம்.
நகல்: மாநகர ஆணை புத்தகம்.
நகல்: இருப்பு கோப்பு.

//உ.ந.உ.ப.அ//

06/02/2024

முதுநிலை நிர்வாக அதிகாரி

06/02/2024